மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) பதினாறு வழக்குகள்.

(இ) மேற்குறித்த பதினாறு வழக்குகளில் ஒன்பது வழக்குகள் முடிவு செய்யப்பெற்றுள்ளன. சில வழக்குகளில் மனுதாரர்களும் எதிர் மனுதாரர்களும், தங்களிடமுள்ள தஸ்தாவேஜுகளைச் சமர்ப்பிப்பதற்குத் தவணை கேட்டிருக்கின்றனர். எஞ்சியுள்ள ஏழு வழக்குகளையும் உடனடியாக முடிவு செய்வதாக சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியர்கள் உறுதி அளித்துள்ளனர். அந்த வழக்குகளை விரைவில் முடிவு செய்வதற்கான பயனுள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்த வட்ட ஆட்சியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

Sales Tax

* 218 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there has been any discussion that the basis of Commercial Tax should be the same in all the Southern States, at the meeting of the Southern Regional Council held at Madras on 14th March 1967 ; and

(*b*) if so, the decision taken ?

வணிக வரி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 14—8—1968 அன்று சென்னையில் நடந்த தென் மண்டல (Southern Regional Council) கூட்டத்தின்போது தென்னக மாநிலங்களில் ஒரே மாதிரி வணிக வரி முறை கையாள வேண்டும் என்பதைக் குறித்து பேசப்பட்டதா ?

(இ) ஆமெனில், என்ன முடிவு எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) மாநில அரசாங்கங்கள் தங்களிடையே தகவல்களைப் பரிமாற்றம் செய்துகொள்வதென்றும், கிழக்கு மண்டல, வடக்கு மண்டல வட்டார மன்றங்கள் பரிந்துரைத்த சரக்குகள் பட்டியல்களில் காணும் இனங்கள் எதையேனும் ஒரு சீரான வரிவிதிப்புக்கான சிறப்புச் சரக்குகள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள முடியுமா என்று பரிசீலிப்பதென்றும், மன்றத்தில் அடுத்த கூட்டத்தில் இதைச் சீர்தூக்கிப் பார்ப்பதென்றும் முடிவு எடுக்கப்பட்டது.

திரு சா. கணேசன் : தென்னகத்திலுள்ள பல்வேறு மாநிலங்களிலும், கிட்டத்தட்ட சுமார் நான்கு மாநிலங்களிலும், ஒரே குறிப்பிட்ட உற்பத்திக்கு வெவ்வேறு வகையான வணிக வரி முறை அல்லது அளவு வேறுபாடு இருப்பதால், நம்முடைய மாநிலத்தின் உற்பத்தியை அல்லது விற்பனையை அது பாதிக்கக் கூடியதாக அமைகிற நிலையை உணர்ந்து, எல்லா மாநிலங்களுக்கும் பொருத்தமாக நம்முடைய மாநிலத்தில் சிறிது குறைவாக வைத்தால், நம்முடைய மாநிலத்தின் விற்பனை வரி வருமானம் அதிகப்படும் என்பதை அரசு ஏற்றுக்கொள்ளுகிறதா ? அப்படி ஏற்றுக்கொண்டால் அதன் மீது என்ன செய்யவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையொட்டித்தான் நம்முடைய அரசாங்கம் செயல்படுகிறது. நம்முடைய தொழில் வளர்ச்சி, இங்கே இருக்கிற நிலைமைகள், அத்தோடு பிற மாநிலங்களில் இருக்கிற நிலைமைகள் எல்லாம் வெவ்வேறாக இருக்கலாம். நம்முடைய நிதி ஆதாரங்களை ஒரே சீராக வைப்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. இதைப்பற்றி